புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

# அகநானூற்றில் குறிஞ்சி நில மக்களின் வாழ்வியல்

**ஆய்வாளர்:**
**ஜினிமோள்.க [JINI MOL.K]**
*பதிவு எண்: 21113114022035*
*முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,*
*நேசமணி நினைவுக்கிறிஸ்தவக் கல்லூரி,*
***(மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழத்துடன் இணைவு பெற்றது)***
*மார்த்தாண்டம் – 629165*

**நெறியாளர்**
***முனைவர்.சா.மேகலின்சந்திரா,***
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,*
*நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி,*
***(மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழத்துடன் இணைவு பெற்றது)***
*மார்த்தாண்டம் – 629165.*

**ஆய்வுச் சுருக்கம்:**

*தமிழர்கள் நிலத்தை ஐந்தாக பகுத்து ஐவகை நிலம் என வகைப்படுத்தினர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பது ஆகும். பாலை என்பது முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து பாலை என்பதோர் நிலமாக மாறியது என்பர். குறிஞ்சி நிலம் என்பது ஐவகை நிலத்திலும் முதன்மையானது ஆகும். இது மலையும் மலையினைச் சார்ந்த இடம் ஆகும். இங்கு பூக்கும் மலரான குறிஞ்சி மலரின் பெயராலேயே குறிஞ்சி நிலம் என்று அழைக்கப்படுகிறது. குறிஞ்சி நிலத்திற்குரிய பெரும் பொழுது கூதிர்காலம் ஆகும். சிறு பொழுது யாமம் என்பது ஆகும். குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்கள் முருகனை தெய்வமாக வழிபட்டனர். இந்த குறிஞ்சி நிலமானது இயற்கை வளம் மிக்க பகுதியாகும். இங்கு மலை வளம், நீர்வளம், செல்வ வளம் என அனைத்தும் குறிஞ்சி நில மக்களின் வாழ்க்கையை வளப்படுத்துகின்றது. இங்கு வாழ்கின்ற மக்களை குறவர், குறத்தி கானவன், வேட்டுவன் என செய்யும் தொழிலின் அடிப்படையில் பல*

*பெயர்களால் அழைக்கப்பட்டனர். மனிதனின் இன்றியமையாத் தேவையான உணவுப் பொருட்கள் இயற்கையில் மிகுதியும் கிடைக்கின்ற இடம் மலைப்பகுதி ஆகும். முதலில் மனிதன் இயற்கையில் கிடைத்த காய், கனி, விதை, கிழங்கு, தேன், கள், வேட்டையாடிய இறைச்சி என அனைத்து உணவுகளையும் உட்கொண்டு வாழ்ந்திருந்தான். மக்களின் அடிப்படைத் தேவைகளில் அடுத்தபடியாக உடையானது காணப்படுகிறது. ஆதிமனிதன் முதலில் இலை, தளை என்பவற்றை ஆடையாகப் பயன்படுத்தினான். பின்னர் நூலால் நெய்யப் பட்ட ஆடையினை குறிஞ்சி நில மக்கள் அணிந்தனர். காலின் பாதுகாப்பிற்கு தொடுதோல் என்னும் செருப்பினை அக்கால மக்களும் பயன்படுத்தினர். குறிஞ்சி நில மக்களின் இருப்பிடம் மலையும் மலை சார்த்த பகுதி ஆகும். அங்கு புல்லால் வேய்ந்த அழகிய குடிசையினை அமைத்து அதில் அழகிய ஓவியங்களை வரைந்து வீட்டினை அழகு படுத்தினர். இந்த வீடானது தாழிடாத கதவினை உடையதாக காணப்பட்டது. தொழில் என்பது வாழ்க்கையின் தேவைகளை பூர்த்திச் செய்வது ஆகும். குறிஞ்சி நில மக்கள் தேனெடுத்தல், வேட்டையாடல், உழவு செய்தல், தினைப்புனம் காத்தல் போன்றத் தொழில்களைச் செய்தனர். இவ்வாறாக குறிஞ்சி நில மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையினை அழகுற அமைந்தனர் என்பதையும் வேட்டை சமூக மக்கள் உழவுத் தொழில் செய்து வேளாண்மை சமூகமாக மாறியதையும் இக்கட்டுரையில் காணலாம்.*

***<u>முன்னுரை:</u>***

*மக்கள் தாங்கள் வாழ்கின்ற நிலச்சூழலுக்கு ஏற்றவாறு தம் வாழ்வியலை அமைத்துக் கொள்கின்றனர். இது பண்டையக் காலந்தொட்டு இன்று வரைக்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இயற்கையானதொரு தொடர் நிகழ்வு ஆகும். அவ்வகையில் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை குறிஞ்சி நில மக்களின் வாழ்க்கையாகும். இவர்கள் தங்கள் வாழ்வின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம், தொழில் போன்றவற்றில் எவ்வாறு இயற்கையோடு இணைந்து வாழ்ந்தனர் என்பதனைப் பற்றி இக் கட்டுரையில் காணலாம்.*

***<u>குறிஞ்சி நில வளம்:</u>***

*மலை சார்ந்த குறிஞ்சி நிலமானது ஐவகை நிலங்களில் ஒன்று ஆகும். இந்நிலமானது இயற்கை வளமான மலைவளம், நீர் வளம் மற்றும், செல்வ வளம் மிக்க பகுதி ஆகும். இங்குள்ள. மலையில் அதிகமான மரவகைகள் காணப்படுகின்றன. இவைகள் உணவிற்காகவும், வேறு பலத் தேவைகளுக்காகவும் பயன்படுத்தினர். மலைப்பகுதிகளிலிருந்து வரும் நீரானது மக்களுக்கும் விலங்குகளுக்கும் நீரின் தேவையைப் பூர்த்தி செய்தது. பொன் வளம் மிக்கப் பகுதியாக இக்குறிஞ்சி நிலமானது காட்சியளிக்கிறது. இதனை,*

*“பொரு தொலை யானை வெண்கோடு கொண்*
*நீர் திகழ் சிலம்பின் நன் பொன் அகழ் வோன்*
*கண்பொழுது இமைக்கும் திண்மணி கிளர்ப்ப” [அகநானூறு 282:3-5]*

*இப்பாடலடியானது வேட்டுவன் ஒருவன் நீர் விளங்கும் மலைச்சாரலிடையே யானையின் வெண் தந்தம் கொண்டு பொன்னை அகழ்ந்து எடுத்தான் என்ற செய்தியைக் கூறுகிறது. இதன் வாயிலாகக் குறிஞ்சி நிலத்தின் வளத்தினை அறிய முடிகின்றது.*

***<u>குறிஞ்சி நில மக்கள்:</u>***

மக்கள் வாழ்கின்ற வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்றவாறு அவர்கள் பெயர்களும் அழைக்கப்பட்டன. குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்கள் குறவர், குறத்தி, கானவன், வேட்டுவன் எனப் பலப் பெயர்களில் அழைக்கப்பட்டனர். குறிஞ்சி நிலத்து ஊர்களைச் சிறுகுடி, பாக்கம் என்று அழைத்தனர். குறிஞ்சி நில மக்களின் தலைவர்கள் வெற்பன், சிலம்பன் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டனர்.

***குறிஞ்சி நிலமக்களின் உணவு:***

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் முதன்மையானது உணவு ஆகும். பண்டைக் கால மனிதனின் முதல்த் தொழில் உணவுப் பொருட்களைத் தேடுவது ஆகும். அவர்கள் இயற்கையாய் கிடைத்த தேனையும், காய்களையும், பழங்களையும் உணவாக உட்கொண்டனர். பின்னர் பறவைகளையும், விலங்குகளையும் வேட்டையாடி அவற்றின் இறைச்சியை பதப்படுத்தாமலே உணவாக பயன்படுத்தினான். பின்னர் நாகரிக வளர்ச்சியால் வேகவைத்தும் அறுசுவை உணவாகவும் பயன்படுத்தினான்.

***நெல் உணவு :***

குறிஞ்சி நில மக்கள் நெடுத்தொலைவிலிருந்து வளம்பொருந்திய வயல்களிலே விளைந்த நெற்கதிர்களைக் கொண்டு வந்து அவற்றை பெரிய தண்டினை உடைய ஆம்பல் மலருடன் சேர்த்து சமைத்து அவற்றை உணவாக உண்பர். இதனை,

*"செழுந் நெல்லின் விளைகதிர் கொண்டு*
*தடந்தாள் ஆம்பல் மலரொடு கூட்டி" [அகம் 78:17-18]*

என்னும் பாடலானது மெய்ப்பிக்கிறது.

***பலாப்பழம்***

மலைப்பகுதியான குறிஞ்சி நிலத்தில் அதிக பலா மரங்கள் காணப்பட்டன. அவற்றிலிருந்து பெரிய பலாப் பழத்தை, வேட்டையாடி களைத்து வரும் கானவன், தனது வீட்டின் முற்றத்தில் உறவினரோடு உண்டு மகிழ்த்தான். இதனை,

*"முன்றின் நீடிய முடிவு உறழ் பலவின்*
*மழிமகிழ் உவகையன், கிளை யொடு கலி சிறந்து,*
*சாந்த நெகிழியின் ஊன்புழுக்கு அயரும்" [அகம் 172:11-13]*

என்னும் பாடலானது பலாப்பழத்தினது மதுவானது களிப்பினைத் தரவல்லது என்பதனை எடுத்துக் கூறுகிறது.

***செந்தினைப் பயிறு:***

குறவர்கள் பழங்கொல்லையாகிய மேட்டு நிலத்திலே செந்தினைப் பயரினைப் பயிரிட்டு, பாதுகாத்து உணவாகப் பயன்படுத்தினர். இதனை,

*"முதைச் சுவற் கலித்த மூரிச் செந்தினை*
*ஓங்குவணர்ப் பெருங்குரல் உணீஇய, பாங்கர்ப்" [அகம் 88:1-2]*

என்ற பாடலடிகள் மெய்ப்பிக்கின்றன.

**தேன் உணவு:**

*குறிஞ்சி நில மக்களின் உணவுகளில் தேன் முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. இதனை,*

*“குறைஆர் கொடுவரி குழுமுஞ்சாரல்*
*அறையுறு தீந்தேன் குறவர் அனுப்ப” [அகம் 322:11-12]*

*என்ற பாடலடிகள் பெரிய மலை உச்சியினை உடைய பாறையிடையிலிருந்து தேனடைகளை அறுத்து எடுத்து வந்து அதனை பிழிந்து உணவாகப் பயன்படுத்தினர் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.*

**கள் உணவு:**

*மலையிலே வாழ்கின்ற கூத்தர் இன மக்கள் அரையிலே மணிகளைக் கட்டிக் கொண்டு தெருவிலே கூத்தாடும் போது களைப்பு தெரியாமல் இருக்க அழகிய மூங்கில் குழாயில் இருந்து கிடைத்த தேன்போன்ற கள்ளினை உண்டனர். இதனை,*

*“எவன் கொல் வாழி தோழி கொங்கர்*
*மணியரை யாத்து மறுகின் அன்ன ஆடும்*
*உள்ளி விழவின் அன்ன*
*அலர்ஆ கின்றது பலர்வாய்ப் பாட்டே?” [அகம் 368 : 16-19]*

*என்ற பாடல் வாயிலாக அறியலாம்.*

*இனிய சுவை மிக்க பலாப்பழத்தின் சுளைகளை மட்டும் எடுத்து தேனோடு சேர்த்து பிசைந்து மூங்கில் குழாய்களிலே நெடுநாள் அடைத்து வைத்தனர். பின்னர் அது முதிர்ந்த 'தோப்பிகள் என்ற கள் கிடைக்கிறது.*

*இந்த தோப்பிகள் என்ற கள்ளினை முதலில் உயர்ந்த முடியினையுடைய கடவுள் உறையும் மலைக்குப் படைத்தனர். பின்னர் அவர்கள் மகிழ்ந்தனர்.*

**குறிஞ்சிநில மக்களின் உடை:**

*மக்களின் அடிப்படைத் தேவைகளில் உடையும். முக்கியமான ஒன்று ஆகும். ஆதிகால மனிதன் முதலில் இலை, தளைகளையே உடையாகப் பயன்படுத்தினான். பின்னர் நாகரிக வளர்ச்சியால் அது பல்வேறு பரிணாமங்களைப் பெற்றுள்ளது. குறிஞ்சி நில மக்களும். நூலால் நெய்யப்பட்ட நல்ல ஆடையினை அணிந்தச் செய்தியினைக் காணலாம். இதனை,*

*“நுண் நூல் ஆகம் பொருந்தினன், வெற்பின*
*இளமழை சூழ்ந்த மடமயில் போல.” [அகம் 198: 6-7]*

*என்ற பாடல் வரிகள் மெய்ப்பிக்கின்றன.*

**செருப்பு:**

*காலின் பாதுகாப்பிற்காகத் தொடுதோல் என்ற பெயரில் செருப்பு அணியும் பழக்கம் குறிஞ்சி நில மக்களிடம் இருந்தது. குறிப்பாக விவசாயம் செய்யத் துவங்கிய குறவர்கள் தாங்கள் பயிரிட்டு அறுவடை முடிந்த கொல்லைகளைத் தீயிட்டு எரிப்பர். அப்போது காலில் சூடு படாமலிருக்க காலில் தொடுதோல் அணிந்திருந்தனர். இதனை,*

*"தொடுதோற் கானவன் சூடுறு வியன்புனம்" [அகம் 368:1]*

*என்ற பாடல் வழியாக அறியலாம்.*

**குறிஞ்சி நில வீட்டின் அமைப்பு:**

*மலைப்பகுதிகளில் மக்கள் தங்கள் வீடுகளை அழகிய முறையில் அமைத்திருந்தனர். அழகிய ஓவியம் வரையப்பட்ட வீடுகளும் காணப்பட்டன. வீட்டை மக்கள் தங்களின் பாதுகாப் பிற்காவும், உணவுப் பொருட்களைப் பாதுகாக்கவும் குடிசை என்ற பெயரில் புல்லால் வேய்ந்து அமைத்திருந்தனர். இதனை,*

*"புள் வேய் குரம்பை புலர ஊன்ற" [அகம் 172:10]*

*என்ற பாடல் வாயிலாக அறியலாம். அவர்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தது புலனாகிறது. குறவர்களின் வீட்டில் முற்றம் என்ற இடம் அமைந்திருந்தது. இதனை,*

*"தேம்பிழி நறவின் குறவர் முன்றில்" [அகம் 78:7]*

*என்ற பாடல் வாயிலாக அறிய முடிகிறது. இந்த முற்றத்தில் தேன் கூடுகளைக் கொண்டு வந்து பிழிந்து மது எழுத்து உண்டு மகிழ்ந்தனர்.*

*குறவர் வாழ்ந்த குடிசை வீடானது தாழிடப்படாததாகக் காணப்பட்டது. அக்குடிசைகளில் குடும்பத்தொடு வாழ்ந்து வந்தனர். இதனை*

*"வீழா கதவம் அசையினன் புகுதந்து" [அகம் 102:13]*

*என்று பாடல் வாயிலாக அறியமுடிகிறது.*

**தொழில்கள்:**

*மக்களின் வாழ்க்கையை வளப்படுத்தவும் ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாக. மாற்றவும் தொழில்கள் உதவுகின்றன. மக்கள் பொருள் ஈட்ட வேண்டும் என்ற உயரிய நோக்குடன் தொழில்களில் ஈடுபட்டனர். சங்க கால மக்கள் உழைப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்தனர். குறிஞ்சி நில மக்கள் வேட்டையாடுதல், தேனெடுத்தல், தினைப்புனம் காத்தல், உழவுத் தொழில் எனப் பல தொழில்கள் செய்து குடும்பமாக வாழ்ந்து வந்தனர்.*

**வேட்டைத் தொழில்:**

*குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த குறவர்கள் வேட்டையாடுதலைத் தலையாயத் தொழிலாகக் கொண்டிருந்தனர். இவர்கள் வேட்டைக்குச் செல்லும் போது வேட்டை நாய்களையும் பயன்படுத்தினர். இது இவர்களின் தொழிலுக்குப் பெரிதும் உதவியாக இருந்தது. இதனை,*

*“ஓட்டியல் பிழையா வயநாய் பிற்பட*
*வேட்டம் போகிய குறவன் காட்ட” [அகம் 182 : 5-6]*

*என்ற பாடல் வாயிலாக அறியலாம்.*

**தேனெடுத்தல்:**

*மலைப்பகுதிகளில் வாழும் குறவர்கள் மிகவும் உயரம் மிக்க மலைப் பகுதிகளிலும், பாறைகளிலும் இருந்து தேனடைகளை எடுத்து வந்து உணவாகப் பயன்படுத்தினான்.*

**உழவுத் தொழில்:**

*வேட்டை சமூக மக்கள் வேளாண்மை சமூகத்திற்கு மாறியது குறிஞ்சிநிலத்தில் தான். பின்னிப் படர்ந்து கிடக்கும் கொடிகளை எல்லாம் பகடுகள் பூட்டிய ஏர்களால் உழுது செந்நிலமாக மாற்றி விதைகளை விதைத்து உழவு செய்தனர். இவ்வாறு செய்ததன் விளைவாக நல்ல பயன் விடைத்தது.*

*இங்கு விளைந்த பயிறுகளை கிளிகள் கவராமல் இருக்க பெண்கள் பகலில் தினைபுனம் காத்தனர். ஆண்கள் காட்டுப்பன்றிகள் இரவில் கவராமல் இருக்க பரண் அமைத்து இரவில் பயர்களைப் பாதுகாத்தனர்.*

**தொகுப்புரை:**

*இவ்வாறு குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையினை வாழ்ந்தனர். உணவு, உடை, இருப்பிடம் என்ற மூன்றையும் வாழ்க்கைக்கு எவ்வளவு முக்கியம் என்பதை உணர்ந்த அவர்கள் மலைப்பகுதியில் அழகாக வாழ்ந்து வந்தனர். வேட்டையாடிய பன்றி இறைச்சி, தேன், கள், நெல், பயிர் வகைகள் போன்றவை அவர்களின் முக்கிய உணவாகக் காணப்பட்டன. புல்லால் வேய்ந்த வீட்டில் குடும்பத்தோடு வாழ்ந்தனர். குறிஞ்சி நில மக்கள் சமுதாயத்தைச் செப்பனிட்டு நாகரீகத்திற்குத் தோற்றுவாயாகத் திகழ்ந்தனர் என்பது இக்கட்டுரையின் முடிவு ஆகும்.*

****************

***துணைநூற்பட்டியல்:***


1. *அகநானூறு - புலியூர் கேசகன் உரை*
   *முதல் பதிப்பு செப்பம்பர் 2010*
   *சென்னை - 600 002*
2. *சங்கத்தமிழர் வாழ்வியல் - தா.நீலகண்டபிள்ளை*
   *முதற்பதிப்பு ஏப்ரல் 2012*
   *செம்மூதாய் பதிப்பகம்*
   *சென்னை – 600 064*
3. *தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும் - டாக்டர்.கே.கே.பிள்ளை*
   *பதிப்பு 2002*
   *உலக தமிழாராய்ச்சி நிறுவனம்*
   *சென்னை – 600 113*